செய்தி வெளியீடு எண் : 1213 நாள் : 19.07.2022

# தமிழ்நாடு நாள் விழா – கலைவாணர் அரங்கில் நடைபெறும் தொல்லியல் துறை மற்றும் நிலஅளவைகள் துறை கண்காட்சி நீட்டிப்பு

சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18 (1967) ஆம் நாளையே தமிழ்நாடு திருநாளாக இனி கொண்டாடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு நாள் விழா 18.07.2022 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதனையொட்டி, சென்னை கலைவாணர் அரங்கத்தில் தொல்லியல் துறை மற்றும் நிலஅளவைகள் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**இக்கண்காட்சியின் சிறப்பு அம்சங்கள்**

- இந்த சிறப்புக் கண்காட்சியினை பொதுமக்கள் இலவசமாக காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை கண்டுகளிக்கலாம்.
- சென்னையில் முதன் முறையாக தொல்லியல் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியில் கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, மயிலாடும்பாறை, கொடுமணல் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ள அரியவகை தொல்பொருட்களும் காட்சிப்படுத்தப்படுத்தப் பட்டுள்ளன.
- தமிழகத்தில் வாழ்ந்த பழங்கால மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள், சுடுமண் குழாய்கள், கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், கண்ணாடி மணிகள், பவள மணிகள், தங்க நாணயங்கள், வெள்ளி முத்திரைகள், ஈமச்சடங்கு மட்கலன்கள், உறை கிணறு, போன்றவை பொதுமக்களின் பார்வைக்காகவும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

❖ மேலும், தமிழ்நாடு நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள வரைபட கண்காட்சியில் சென்னை மாகாணத்தின் பழைய வரைபடங்கள் மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர், சென்னை மாநில வரைபடம் முதல் தற்போதைய தமிழ்நாடு மாநில வரைபடங்கள் வரையிலான அரிய வகைப் புகைப்படங்கள் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

❖ பொதுமக்களின் கோரிக்கைக்குகேற்ப, இந்த சிறப்புக் கண்காட்சி வரும் 24.07.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை நீட்டிப்பு செய்யப்படுகிறது. பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் இக்கண்காட்சியினை கண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in